**திருவண்ணாமலை வணிகவரி மாவட்ட துணை ஆணையர்(மாநிலவரி)(முகூபொ), அவர்களின் செயல்முறைகள் முன்னிலை - திருமதி.ஞா.நந்தினி.,**

ந.க.அ1/477/2019 நாள்: .12.2019

பொருள்- பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - திருவண்ணாமலை வணிகவரி மாவட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி-4 - தேர்வுகள் 2015-16, 2016-17 மற்றும் 2017-18 மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட திரு.பெ.கவியரசன், இளநிலை உதவியாளர் - பணிவரன்முறை ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை- 1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்:1333/PSD-G1/2019 நாள்: 18.02.2019.

2) இணை ஆணையர்(மாநிலவரி), வேலூர் கோட்டம், வேலூர் அவர்களின் செயல்முறைகள் நக.ஆ2/11031/2018-1, நாள்: 26.02.2019.

ஆணை-

பார்வை ஒன்றில் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி தொகுதி-4 2015-16, 2016-17 மற்றும் 2017-18 மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை இரண்டில் காணும் செயல்முறைகளின்படி திருவண்ணாமலை வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆற்காடு மாநிலவரி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திரு.பெ.கவியரசன் என்ற இளநிலை உதவியாளருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 11.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் தொடங்கியும் ஆணையிடப்படுகிறது.

இப்பணியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும் எனவும் தகுதிகாண் பருவ காலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெறவேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

கீழ்க்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் தனியாளரின் தகுதிகாண் பருவம் தொடங்கி ஆணை வழங்கப்படுகிறது.

"Declaration of probation is subject to the final outcome of the Writ Petitions on the files of the Hon'ble High Court of Judicature at Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to this recruitment".

2-12-19

துணை ஆணையர்(மாநிலவரி)(முகூபொ)
திருவண்ணாமலை.

பெறுநர்
திரு.பெ.கவியரசன்,
இளநிலைஉதவியாளர்,
மாநிலவரி அலுவலர் அலுவலகம்,
ஆற்காடு.
(தலைமை அலுவலர் மூலமாக)

02/12/19

நகல்: மாநிலவரி அலுவலர் அலுவலகம், ஆற்காடு.
நகல்: இணை ஆணையர்(மாநிலவரி), வேலூர் கோட்டம், வேலூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned by CamScanner